செ.வெ.எண்: 621/2016 நாள்: 09.09.2016

# பத்திரிகை செய்தி

தமிழக அரசு உத்தரவு படி, கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சியும், நாகர்கோவில் பைரவி பௌண்டேஷனும் இணைந்து, துப்புரவு பணி மற்றும் டெங்கு விழிப்புணர்வு முகாம் கன்னியாகுமரி பேரூராட்சிக்குட்பட்ட பகவதியம்மன் கோவில் கிழக்கு பிரகாரத்தில் 08.09.2016 அன்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில் அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரி மற்றும் கன்னியாகுமரி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி மாணவ, மாணவிகள் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேலும், பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. க. மகரபூஷணம், பேரூராட்சிகளின் இணை இயக்குநர் திரு. எஸ்.எம். மலையமான் திருமுடிக்காரி, பேரூராட்சிகளின் இயக்குநராக செயற்பொறியாளர் திரு. நடராஜன், நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. மு. மாஹீன் அபுபக்கர், உதவி செயற்பொறியாளர் திரு. மாடசாமி சுந்தர்ராஜ், கன்னியாகுமரி பேரூராட்சி தலைவர் திருமதி. தொ. பிரபா வின்ஸ்டன், கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. க. திருமலைகுமார் மற்றும் வார்டு உறுப்பினர்கள் அனைவரும் மேற்படி டெங்கு ஒழிப்பு மற்றும் துப்புரவு பணி முகாமில் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.